# DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 419/ 2013 |
| Depostition of witness for | Prosecution wit. PW.5 |
| Name | டாக்டர் மாலதி பத்மநாதன், நிர்வாக உரிமையாளர், சங்கர் மருத்துவமனை, வடக்கு ஆத்தூர் , தூத்துக்குடி மாவட்டம். |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | பொது மருத்துவர். |
| Religion | |
| Age | |

<u>( எதிரி ஆஜரில்லை: எதிரிதரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )</u>

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 05-05-2026.(நேரம்: 11.56PM )**

**<u>முதல்விசாரணை</u>**

1.நான் தூத்துக்குடி மாவட்டம் வடக்கு ஆத்தூரில் உள்ள சங்கர் மருத்துவமனை என்ற தனியார் மருத்துவமனையில் நிர்வாக உரிமையாளராக பணியாற்றி வருகிறேன்.

2.கடந்த 16.08.2013 அன்று மதியம் 03.30 மணிக்கு ஆலங்குளம்,மேலமருதம்புதூரை சேர்ந்த ஐயாதுரை மகனான சுமார் 21 வயது மதிக்கத்தக்க ஜீவா என்பவரை உறவினர்கள் மற்றும் உடன் பணியாளர்களால் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார்.

3.அவர் தான் பணிபுரியும் இடத்தில் Agitator என்ற இயந்திரத்தில் பழுது நீக்கம் செய்யும் போது எதிர்பாராத விதமாக அடிப்பட்டதால் அவருக்கு சிகிச்சை அளிப்பதற்காக என்னால் பரிசீலனை செய்யப்பட்டது.அவ்வாறு

அவருக்கு மருத்துவ பரிசோதனை செய்தபோது கீழே கண்ட காயங்கள் அவருக்கு காணப்பட்டன.

1. மார்பகத்தில் ஒரு கன்றிய காயமும்.
2. வயிற்று பகுதியில் ஊமைக்காயமும்.
3. கீழ் முதுகு பகுதியில் ஒரு கன்றிய காயமும்.

இருந்தது.

4.அவரை உள்நோயாளியாக எங்களது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அவருக்கு வலிநிவராணி ஊசிகளும், அவருக்கு ஏற்பட்ட காயங்கள் குணப்படுத்துவதற்காக உயிர் எதிரிணி மருந்து ஊசிகளும் போடப்பட்டன.

5.அவர் அதன்பின்பு குணமாகி நல்ல முறையில் மருத்துவமனையில் இருந்ததால் அவர்கள் வேண்டிகேட்டுக்கொண்டதன் பேரில் எங்களால் டிஸ்சார்ச் செய்யப்பட்டார்.

6.அவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு சாதாரண காயம் என்று நான் சான்று அளித்தேன்.காயம்ப்பட்ட ஜீவாவிற்கு நான் வழங்கிய **காயசான்றிதழ் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7.போலிசார் என்னை இது தொடர்பாக விசாரித்தார்கள்.

**1 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை (நேரம் 12.10PM)**

1.மேலே சொன்ன காயங்கள் ஒரு நபருக்கு அவர் படிக்கட்டில் இறங்கி வரும்போது தவறி கீழே விழுவதன் காரணமாக அவருக்கு அதுபோன்ற காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்று சொன்னால் வாய்ப்புள்ளது.

2.அதேபோன்று இருசக்கர வாகனத்தில் ஒருநபர் செல்லும்போது சில சமயங்களில் தவறி கீழே விழும்போது மேலே சொன்னதுபோன்று காயங்கள் அவருக்கு ஏற்பட வாய்ப்புள்ளது என்று சொன்னால் வாய்ப்புள்ளது.

**1 ஆம் எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை 2 ஆம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.